யாழ். கந்தர்மடம் - பழம் வீதி

# ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்



# திருப்பாத்திரட்டு

உ

ஸ்ரீ சித்திவிநாயகர் துணை

*யாழ். கந்தர்மடம் - பழம் வீதி*


## ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்




# திருப்பாத்திரட்டு

(அடியார்கள் சந்நிதியில் இசைக்கக்கூடிய தெய்வீகப் பாக்கள் சிலவற்றின் தொகுப்பு)

| | | |
|---|---|---|
| நூல் | : | திருப்பாத்திரட்டு |
| தொகுப்பு | : | வைத்திய கலாநிதி பரமேஸ்வரக் குருக்கள் |
| | | அம்பிகாபதி © |
| முதற்பதிப்பு | : | 2018 ஆனி |
| வெளியீடு | : | ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில், |
| | | யாழ் கந்தர்மடம், பழம் வீதி, |
| | | யாழ்ப்பாணம், |
| | | இலங்கை |
| அச்சு | : | குரு பிறிண்டேர்ஸ், 39/2, ஆடியபாதம் வீதி, |
| | | திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |
| அட்டை வடிவமைப்பு | : | ஆறு.பிரசாத் |
| பக்கம் | : | 68 |
| பிரதிகள் | : | 300 |



யாழ் – பழம் வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் முகப்பு



ஸ்ரீ சித்திவிநாயகர் மணிமண்டபம்

# சமர்ப்பணம்

எமது குலதெய்வமாம்

ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் துணை நிற்க.

எமது கோவில் அடியார்களின் பேராதரவினால் மிகச் சிறப்பாகத் தினசரி பூசனைகளும் திருவிழாக்களும் நடைபெற்று வருங்கால், அடியேனது அன்புத் தந்தையார் ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்களால் ஸ்தாபிக்கப்பட்டுத் தொடர்ந்து ஸ்ரீ சித்திவிநாயகர் அடியார்களின் ஒத்துழைப்போடு, அண்ணா ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களால் மிகச் சிறப்பாகப் பரிபாலனம் செய்யப்பட்டுவந்த ஸ்ரீ சித்தி விநாயகருக்கு எம்மால் இயன்ற சிறியதொரு பாத்திரட்டைத் தொகுத்தளிக்கத் திருவருள் கைகூடியது.

இதன் நிமித்தம் வடிவமைந்ததே இந்நூல். அடியார்கள் அவ்வப்போது உகந்தவாறு எம்பெருமானது கோவிலில் தனியாகவோ, கூட்டாகவோ இசைக்கக் கூடிய சில தேவாரங்கள், பஜனைகள் இத்தியாதி ஆன்மீகப் படைப்புகளைத் தொகுத்து சிறிய நூல் வடிவில் வழங்குகிறேன். எமது விநாயகப் பெருமான் அடியார்கள் இதனை நன்கு பயன்படுத்துவர் என்ற நம்பிக்கை உண்டு. இப்பாத்திரட்டை அவ்வப்போது மேன்மேலும் நல்ல முறையில் அமைத்து வெளியிடவும் இடமுண்டு. அதற்கு அடியார்களின் ஆக்க பூர்வமான ஒத்துழைப்புக் கிடைக்கும் என்பது அடியேனது தாழ்மையான எதிர்பார்ப்பு. இக்கோவிலின் சரிதத்தை, நான்

அறிந்தவரை சுருக்கமாக எழுதி அடியார்களின் நன்மை கருதி இந்நூலின் இறுதியில் இணைத்துள்ளேன்.

ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் ஆலய பரிபாலனத்துக்குத் தோளோடு தோள் கொடுத்து உதவும் குடும்ப உறுப்பினர்க்கும், முக்கியமாக இந்நூல் தொகுப்பின்போது அவ்வப்போது உரிய துணையாயிருந்த இல்லத்தரசி ஜெயலட்சுமிக்கும் எனது அன்பு கலந்த நன்றிகள்.

சின்னஞ்சிறு குடிலில் இருந்து ஆரம்பித்த விநாயகருக்கு, பெரிய தொரு கோவிலை அமைத்து ஒழுங்காக, மிகச் சிறப்பாக - வருடாந்த திருவிழாக்களும் நடைபெற அத்திபாரமிட்டு விசேஷ விழாக்களுக் குரிய மகாமண்டபம் ஒன்றையும் அமைத்து வழியமைத்த அன்புத் தந்தை ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும் எனது நன்றியும் வணக்கமும்.

பல்வேறு இடர்கள் நேரிட்டபோதும் கோவிலை அழகுற வடிவமைத்து விநாயகப் பெருமானின் சேவைகளை அதிசிறப்புற இடையறாது இவ்வூர் அடியார்களின் தேவைகளுக்கேற்ப நடாத்திய அண்ணா ஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்கள் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

மேற்குறிப்பிட்ட சேவைகள் அனைத்திற்கும் பேருதவியாயிருந்த அடியார்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

இத்திருப்பாத்திரட்டை யாழ், கந்தர்மடம் பழம் வீதியில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் நல்அருளாசியுடன் அப்பெரு மானின் பாதக்கமலங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

**அம்பி**

(வைத்திய கலாநிதி,
யோகசிரோன்மணி,
கைலை ப. அம்பிகாபதி - இலண்டன்)

# விநாயகரின் உருவ விளக்கம்




| | | |
|---|---|---|
| பெரிய தலை | – | பாரிய சிந்தனை |
| சிறிய கண்கள் | – | கூர்மையான கவனம் |
| பெரிய காதுகள் | – | அதிகம் கவனித்துக்கேள் |
| சிறிய வாய் | – | பேச்சில் சிக்கனம் |
| அபய முத்திரை | – | ஆன்மீகப்பாதையில் செல்வதற்கு அருளும் பாதுகாப்பும் |
| ஒரு தந்தம் | – | நல்லனவற்றைத் தேக்கித் தீயனவற்றை அகற்று |
| துதிக்கை | – | பெரும் திறனும் இசைந்து போதலும் |
| பெரிய வயிறு | – | வாழ்வில் அமைதியாக நல்லன தீயன அனைத்தையும் சீரணித்தல் |
| மோதகம் | – | ஆன்மீகப் பயிற்சிக்கு வெகுமதி |
| மூஞ்சூறு | – | ஆசை (கட்டுப்பாட்டுக்கு மீறின் பங்கம், தவறின் உன்னையே ஏமாற்றும்) |

* "வி" என்றால் சிறப்பு. "நாயகன்" என்றால் தலைவர். சிறப்பு மிக்க தலைவர் என்பது பொருள். கடவுளுக்கெல்லாம் மேலான தலைமைக் கடவுளாக விநாயகப் பெருமான் விளங்குகிறார்.

* மூவரும் தேவரும் போற்றும் தனிப்பெருந்தெய்வம் விநாயகப் பெருமான். ஓங்கார வடிவமுடையவர். போற்றுபவர் துயர் போக்கும் கடவுள். அடியவர்களுக்கு எளிதில் அருள்புரியும் கருணைக்கடல். இடர்களைப் போக்கி வழிகாட்டுபவர் என்பதால் விக்னேஸ்வரன் என்று பெயர் பெற்றார்.

* விநாயகர் ஒரு கொம்பு (தந்தம்), இரு செவிகள், மூன்று திருக்கண்கள், நான்கு திருத்தோள்கள், ஐந்து திருக்கரங்கள், ஆறு எழுத்து மந்திரம் கொண்டவர். அவரை வழிபட்டால் பிறவிகள் நீங்கும். எண்திசைகளும் புகழும். நவமணிகளும் பெற்று செல்வ வளத்துடன் வாழச் செய்வார்.

* விநாயகருக்கு இடைக்குக் கீழே பூத உடம்பும், இடையிலிருந்து கழுத்து-வரை தேவவுடம்பும், மிருகத்தலையும் உள்ளது. ஒரு கொம்பு ஆண்மையையும், கொம்பில்லாத பகுதி பெண்மையையும் என்று எல்லாவற்றையும் தன்னுள்ளே கொண்டிருக்கிறது.

* விநாயகர், யானையை அடக்கும் கருவிகளான பாசமும், அங்குசமும் வைத்திருக்கிறார். தன்னை அடக்குவார் ஒருவரும் இல்லை என்பதைக் குறிக்கும் வகையில் தன் கைகளில் இக்கருவிகளை ஏந்தியுள்ளார்.

* விநாயகருக்கு ஐந்து கரங்கள். கும்பம் ஏந்திய திருக்கரம் படைத் தலையும், மோதகம் ஏந்திய கரம் காத்தல் தொழிலையும், அங்குசம் ஏந்திய கரம் அழித்தல் தொழிலையும், பாசம் வைத்திருப்பது மறைத் தலையும், தந்தம் ஏந்திய கரம் அருளல் தன்மையையும் விளக்குகிறது. உலகவுயிர்களுக்கு வேண்டிய ஐம்பெரும் தொழில் களையும் விநாயகப்பெருமானே செய்து இப்பெரிய உலகத்தை இயக்குகிறார்.

# விநாயகர் மகிமை



பிரணவ வடிவமே விநாயகர், தமக்கு மேலான நாயகர் இல்லாத பெருமான் என்பதே சொற் பொருள். தேவர், மனிதர் முதலிய யாவராலும் முதலில் வழிபடப்படுபவர் மூத்த பிள்ளை யாரே. "விக்கின விநாயக பாத நமஸ்தே" என்பர் வட நூலார். தம்மை நினைவாரது இடையூறு களைப் போக்குவதால் விநாய கருக்கு விக்கினேசுவரர் என்ற திருநாம முளதாயிற்று.

சிவபிரான், திரிபுரதகனஞ் செய்யச் செல்லுங்கால் நினை யாமையால் அவர் சென்ற தேரின் அச்சிறச்செய்தார் என்பர். அச்சிறு பாகம் இன்றும் உள்ளது.

பாற்கடல் கடையும்போது திருமால் முதலினோர் சிந்தியாமையால், கணேசமூர்த்தி மந்தர மலையைச் சாய்த்தனர் என்றும் கூறுவர்.

ஔவையார் பூசையை ஏற்றுக் கயிலை சேர்த்த அனுக்கிரக மூர்த்தி விநாயகரே! சேரமான் குதிரை கயிலைசார ஔவையாரை விநாயகப் பெருமான் துதிக்கையாலெடுத்துக் கயிலையில் இட்டனர். இதனால்,

"கிழவியுங் காதம், குதிரையுங் காதம்"

என்றார் முன்னோர். நன்மை நாடொறும் நணுக விநாயகப் பெருமானைப் போற்றி நலம் பெறுவோமாக.

(மூலம்: யாழ். வரதபண்டிதர்)

# விநாயகர் விரதம்

மக்களின் மகத்தான வழிபாடுகளில் விரதங்களும் ஒன்றாகும். விநாயகர், சுப்பிரமணியர், சிவன், சக்தி வணக்க முடைமையால் ஆன்ம உய்தி பெறலாம்.

விநாயகர் விரதங்கள் பல. அவற்றுள் கார்த்திகை மாசம் அபரபக்கப் பிரதமை முதல் மார்கழி மாசத்துப் பூர்வ பக்கச் சஷ்டி வரையும் உள்ள இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கும் விரதமும் ஒன்றாகும். இது, விஷ்ணு மூர்த்தியைப் பாம்பாக இருக்கும்படி தேவி சபித்ததை விமோசனஞ் செய்யச் சாதனமாயிருந்தது.

*"வின்னாமம் புகல்கின்ற மக்கமதி ஆறாம் பக்கம்"*

என்பதால் அறியலாம் (வில் - தனுர்மாசமான மார்கழி) நமது யாழ்ப்பாணத்தில் இருபத்தொருநாளும் நியமமாக விநாயக வழிபாட் டுடன் அனுஷ்டிப்பவர் பலர் இன்றுமுள்ளனர். ஆடவர் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் இருபத்தொரு இழையாலாகிய நூல் காப்பு அணிந்து விரதமிருத்தல் வேண்டும். இப்படிச் செய்ய இயலாதோர் மார்கழி மாத விநாயகர் சஷ்டியினன்று விரத சீலராக இருப்பது இன்பமூலமாகும். தன வைசியர்கள், மரகத விநாயகரைச் சஷ்டியினன்று மிகவும் வழிபாடு செய்து வருகின்றனர்.

பிள்ளையார் கதையை அன்புடன் இவ்விரத நன்னாட்களில் படிப்பது புண்ணியமாகும். பகை நோய்கள் நீங்கவும் எடுத்த காரியத்தில் சித்தியும், திடகாத்திரமும் எதிலும் வெற்றியும் இதனால் உண்டாகும் சிறப்புக்களாகும்.

(மூலம்: யாழ். வரத பண்டிதர்)

# இறை வணக்கம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் "திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு

- ஔவையார்

**விளக்கம்:**

துப்பு ஆர் திருமேனி - பவளம் போன்ற சிவந்த உடலையும் தும்பிக்கையான் பாதம் - தும்பிக்கையையும் உடைய விநாயகப் பெருமானது திருவடிகளை, பூக்கொண்டு தப்பாமற் சார்வார் தமக்கு - நாள் தோறும் அடைந்து தவறாது மலரிட்டு வணங்கி வருவோருக்கு, நல்ல வாக்குண்டாம் - சிறந்த பேச்சு வன்மை உண்டாகும், நல்ல மனம் உண்டாம் - உயர்ந்த மனம் உண்டாகும், மாமலராள் நோக்குண்டாம் - சிறந்த செந்தாமரைப் பூவில் வீற்றிருக்கும் மகாலட்சுமியின் அருட்பார்வை கிட்டும், மேனி நுடங்காது - அவர்களுடைய உடல் பிணியால் வாட்டமடையாது. (துப்பு- பவளம்) (நுடங்குதல் -வாடி வதங்குதல்)

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்– கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

மண்ணுல கத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலா மெளிதின் முற்றுறக்
கண்ணுத லுடையதோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்துவரும்
வெற்றிமிகுத்து வேழவனைத் தொழ புத்திமிகுத்துவரும்
வெள்ளிக்கொம்பின் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானை
காதலால் கூப்புவார்தம் கை.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் போம்
நல்ல குணமதிகமாம் அருணை கோபுரத்து மேவும்
கணபதியை கைத்தொழுக் கால்.

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைச் சாய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

ஐந்து கரத்தினை ஆனை முகத்தினை
இந்து இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புத்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

பிடியதனுருவுமை கௌமிகு கரியதுவடிகொடு
தனதடி வழிபடுமவரிடர்கடி கணபதிவர
அருளினன் முகுகொடைவடிவினர்
பயில் வலி வலமுறை இறையே.

வானுலகும் மண்ணுலகும் வாழ் மறை
வாழப்பான்மை தருசெய்ய தமிழ் பார்மிசை
விளங்கஞானமத, ஐங்கர மூன்றுவிழி,
நால்வாய் ஆனைமுகனை பரவி அஞ்சலி செய்கிற்போம்



# விநாயகர் மந்திரம்

## காரிய சித்தி மந்திரங்கள்

எந்த ஒரு காரியத்தைத் தொடங்கினாலும் அது எவ்விதத் தடையும் இல்லாமல் முற்றுப்பெற விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பிப்பது நமது வழக்கம்.

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே

என்று பிள்ளையாரை வணங்கி நெற்றியில் குட்டிக் கொண்டு எந்த ஒரு காரியத்தையும் ஆரம்பிக்க வேண்டும். இது விஷ்ணு சகஸ்ரநாமத்தில் உள்ளது.

எல்லாவிதத் தடைகளும், இடையூறுகளும் நீங்கவும், மறைந்து போகவும் வெள்ளை நிற உடையணிந்து கொண்டிருப்பவரும், நான்கு கரங்களை உடையவரும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளும், நிலவைப் போன்ற தன்மையுடையவரும், எப்பொழுதும் ஆனந்தமயமாக அருட்காட்சியளிக்கும் விநாயகரைத் தியானிப்போம் என்பது இதன் பொருளாகும்.

## காலையில் எழுந்தவுடன் சொல்ல வேண்டிய ஸ்லோகம்

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாஸுதம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

பொருள் : யானை முகத்தை உடையவரும், பூத கணங்களால் வணங்கப் பட்டவரும், விளாம்பழம், நாவல்பழம் ஆகியவற்றின் சாரத்தைரசிப்ப வரும், உமையின் புத்திரனும், துக்கத்தைத் தீர்ப்பவரும் ஆகிய விக்னேஸ்வரரின் பாதங்களைப் பணிகிறேன் என்பதாகும்.

## எடுத்த காரியங்கள் யாவினும் தடையின்றி வெற்றி பெற

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்நோப சாந்தயே

கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பஷிதம்
உமாஸ/தம் சோக வினாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்

## விநாயகர் காயத்திரி

ஓம் தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி
தன்னோ தந்தி: ப்ரசோதயாத்

## லட்சுமி கணபதி மந்திரம்

ஓம் ஸ்ரீம்கம் ஸெளம்யாய லட்சுமி கணபதயே
வரவரத சர்வதனம்மே வசமானய ஸ்வாஹா

## சர்வ வித்யா கணபதி மந்திரம்

தினமும் காலையில் 108 முறை சொல்ல, கல்வி அறிவு வளர்ச்சி பெறும். அறிவு விருத்தியாகும். தீய எண்ணங்கள் நீங்கி நல்ல எண்ணங்கள் உண்டாகும்.

ஐம் ப்ளாம் ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் க்லெளம் கம் கணபதயே
வர வரத ஐம் ப்ளாம் சர்வ வித்யாம் தேஹி ஸ்வாஹா

சகல காரிய சித்திக்கான எளிய முறை:
செய்யும் காரியங்களில் தடைகள் விலக

மஹா கணபதிர் புத்தி ப்ரிய: ஷிப்ர ப்ரஸாதத ந
ருத்ர ப்ரியோ கணாத்யக்ஷ உமாபுத்ரோஸ்க நாஸந்

இதை தினமும் 10 முறை சொன்னால் இடையூறின்றி காரியங்கள் நிறைவேறும்.

## கணநாதம்

| | |
|---|---|
| கணநாதம் | கணநாதம் |
| ஈஸ்வரபுத்ரம் | கணநாதம் |
| விக்னவினாயக | கணநாதம் |
| சித்திவிநாயக | கணநாதம் |
| பார்வதிபுத்ரம் | கணநாதம் |
| முக்திப்ரதாய | கணநாதம் |
| மூஷிகவாகன | கணநாதம் |
| மோதகஹஸ்தா | கணநாதம் |
| சிவசிவகஜமுக | கணநாதம் |
| புத்தி ப்ரகாசக | கணநாதம் |
| சித்திவிநாயக | கணநாதம் |

## பாஹிபாஹிகஜானனா

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா

மூஷிக வாஹன கஜானனா மோதக ஹஸ்தா கஜானனா

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா

சாமர வர்ணா கஜானனா விளம்பித சூத்ரா கஜானனா

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா

சியாமள ரூபா கஜானனா மகேஸ்வர புத்ரா கஜானனா

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா

விக்ன விநாயக கஜானனா பாத நமஸ்தே கஜானனா
கஜானனா.... கஜானனா... கஜானனா... கஜானனா...

பாஹி பாஹி கஜானனா பார்வதி புத்ரா கஜானனா
பார்வதி புத்ரா கஜானனா (2)

## பிள்ளையார் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார் (2)

ஆற்றங்கரை ஓரத்திலே அரசமரத்தின் நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

மஞ்சளிலே செய்திடினும் மண்ணினாலே செய்திடினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் ஆழ்த்தும் பிள்ளையார்
(பிள்ளையார்)

அவல்பொரிகடலையும் அரிசிமாவுகொழுக்கட்டையும்
கவலையின்றிதின்னுவார் கஷ்டங்களைப்போக்குவார்
(பிள்ளையார்)

வன்னிமரத்தின் நிழலிலேவரங்கள் தரும் பிள்ளையார்
வில்வமரத்தின் நிழலிலேவினைகள் தீர்க்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

கலியுகத்து விந்தைகளைக்காணவேண்டி அனுதினமும்
எலியின்மீதுஏறியே இஷ்டம்போலச்சுற்றுவார்
(பிள்ளையார்)

ஆறுமுகவேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம்யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்
(பிள்ளையார்)

# கந்தர்மடம் பழம் வீதி விநாயகர் சரணம்

ஸ்ரீ சித்தி விநாயகா சரணம் சரணம்
கஜமுக தேவா சரணம் சரணம்

தத்துவ வடிவே சரணம் சரணம்
சுயம்பு மூர்த்தியே சரணம் சரணம்

சங்கரன் மகனே சரணம் சரணம்
விக்னவினாயகா சரணம் சரணம்

காரணவடிவே சரணம் சரணம்
சுந்தரகணபதி சரணம் சரணம்

மூஷிக வாகனா சரணம் சரணம்
மூலப்பொருளே சரணம் சரணம்

நம்பினர்க் அருள்வாய் சரணம் சரணம்
ஞானகணேசா சரணம் சரணம்

ஒற்றை மருப்புடையாய் சரணம் சரணம்
அங்குசபாசா சரணம் சரணம்

ஊழ்வினை தீர்ப்பாய் சரணம் சரணம்
பழம்வீதி மேவும் சித்திவிநாயகா சரணம் சரணம்

உனதடிபணிந்தோம் சரணம் சரணம்
உந்தனுக்கே அடைக்கலம் அடியோமே

(சைவப் புலவர் வை.சி .சிவசுப்பிரமணியம்)

## பழம் வீதிப் பரம்பொருளே ...

பழம் வீதி அமர்ந்தருளும் பரம்பொருளே ஸ்ரீ சித்திவிநாயகா
நாவார உனைப்பாட வரம் தருவாய் எந்தனுக்கே

சுயம்பு வடிவானவனே சுந்தரனே கணபதியே
கடைக்கண்ணால் பாருமையா கஷ்டங்களைத் தீருமையா

மங்களங்கள் அளிப்பவனே மனன மாட்சி தாருமைய்யா
மன்னு புகழ் உமைபாலா வரம் தந்து அருள்வாயே

வஞ்சம் நிறை புவியினிலே நெஞ்சுரமே நீ தருவாய்
அஞ்சேல் என ஆதரிப்பாய் ஆண்டவனே கணபதியே

சேவடியை நினைப்பதற்கு சேமநலம் தந்திடுவாய்
ஆசையுடன் வேண்டுகிறேன் அருளிடப்பா கணபதியே

நைந்திருக்கும் நெஞ்சதனில் நிம்மதியை நீ தருவாய்
ஐந்துகரம் கொண்டோனே ஆறுமுகன் சோதரனே

கருணை வடிவானவனே கண்கண்ட தெய்வமே
காட்சி தந்து அருள்புரிவாய் கற்பகமே கண்மணியே

ஔவைக்கருள் புரிந்தவனே ஐங்கரனே அற்புதனே
அடியார் துயர் களைபவனே கணநாதா

அவல் கடலை மோதகம் பட்சணங்கள் பல படைத்தோம்
அமுது செய்தே அருள்புரிவாய் ஆண்டவனே ஐங்கரனே

எங்கள் குல விடிவிளக்கே எழில் மணியே கணபதியே
வினை தீர்க்க வல்லவனே வல்லபையின் நாயகனே

பழம் வீதி பரம்பொருளே உன் பதம் சரணடைந்தேன்
வினை தீர்த்து ஆண்டருள்வாய் தந்திமுகா கணபதியே

போதும் இந்தப் பொய் வாழ்க்கை புவிமீதே
முத்திநலம் அருளிடப்பா முழுமுதலே முன்னவனே ஐங்கரனே

(சைவப் புலவர் வை.சி .சிவசுப்பிரமணியம்)

## கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம் (2)
முருகனின் முதல்வா மாயோன் மருகா
அருள் தர வருவாய் திருவடி சரணம்
கணபதி என்றிட கவலைகள் மாறிடும்
கருணை பெருகிடும் கல்நெஞ்சம் உருகிடும்

============= =ஓம்=================



விநாயகர் மணிமண்டபத் திறப்புவிழா (1964)

# விநாயகர் கவசம்

(யாழ். வரதபண்டிதர் எழுதிய பிள்ளையார் கதை )

ஆதியில் இக்கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்ய, அவர் மாந்தவிய முனிவருக்கு அனுக்கிரகிக்க அவர் மாரீசி முனிவருக்கு உபதேசித்தருள - அவர் பல முனிவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிச் செய்தார் என்றறிக. பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும், வறுமையும், பல துன்பங்களும், கவலைகளும், நீங்கும். பெருஞ்செல்வமும், தீர்க்காயு ளும், களத்திர புத்திரமித்ராதிகளும் உண்டாகும். இதைப் படித்தாலும், ஒருவர் சொல்லக் கேட்டாலும் எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.

வளர் சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க!
வாய்ந்தசென்னி அளவுபடா அதிக சவுந்தர தேகம்
மாதோற்சுடர்தாம் அமர்ந்து காக்க! விளரற
நெற்றியை என்றும் விளங்கிய காசிபர் காக்க!
புருவந் தம்மைத் தளர்வில் மகோதரர் காக்க!
தடவிழிகள் பாலசந்திரனார் காக்க!

கவின்வளர் அதரம் கசமுகர் காக்க!
தால் அங்கணக்கீரிடர் காக்க!
நவில்சிபுகம் கிரிசை சுதர் காக்க!
நனி வாக்கை விநாயகர்தாம் காக்க!
அவிர்நகை துன்முகர் காக்க!
அள் எழிற் செஞ்செவி பாசபாணி காக்க!
தவிர்தலுறாது இளங்கொடிபோல் வளர்மணி
நாசியைச் சித்திதார்த்தர் காக்க!

காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனி காக்க!
களம் கணேசர் காக்க!
வாமமுறும் இருதோளும் வயங்கு கந்தபூர்வசர்
தாம் மகிழ்ந்து காக்க! ஏமமுறு மணிமுலை
விக்கின விநாசர் காக்க! இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க!
அகட்டினைத் துலங்கு ஏரம்பர் காக்க!

பக்கம் இரண்டையும் தராதரர் காக்க!
பிருட்டத்தைப் பாவம் நீக்கும் விக்கினகரன் காக்க!
விளங்கிலிங்கம் வியாளபூடணர்தாம் காக்க!
தக்க குய்யந்தன்னை வக்கிரதுண்டர் காக்க!
சகனத்தை அல்லல் உக்க கணபன் காக்க!
ஊருவை மங்களமூர்த்தி உவந்து காக்க!

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க!
இருபதம் ஏகதந்தர் காக்க! வாழ்கரம்
க்ஷிப்பிரப் பிரசாதனர் காக்க! முன்கையை
வணங்குவார் நோய் ஆழ்தரச்செய் ஆசாபூரகர் காக்க!
கேழ்கிளறும் நகங்கள் விநாயகர் காக்க!
கிழக்கினிற் புத்தீசர் காக்க!

அக்கினியிற் சித்தீசர் காக்க!
உமாபுத்திரர் தென்னாசை காக்க!
மிக்க நிருதியிற் கணேசுரர் காக்க!
விக்கினவர்த்தனர் மேற்கென்னுந் திக்கதனிற் காக்க!
வாயுவிற் கசகன்னர் காக்க!
திகழ் உதீசி தக்க நிதிபன் காக்க!
வடகிழக்கில் ஈசநந்தனரே காக்க!

ஏகதந்தர்பகல் முழுதுங் காக்க! இரவினும் சந்தி
இரண்டன் மாட்டும் ஒகையின் விக்கினகிருது காக்க!
இராக்கதர் பூதம் உறு வேதாளம் மோகினி பேய்
இவையாதி உயிர்த்திறத்தால் வருந்துயரும் முடிவிலாத வேகமுறு
பிணிபலவும் விலக்குபு பாசாங்குசர்தாம் விரைந்து காக்க!
மதி,ஞானம், தவம், தானம், மானம், ஒளி, புகழ்,
குலம், வண்சரீரம், முற்றும் பதிவான தனம்,
தானியம், கிரகம், மனைவி, மைந்தர், பயில்
நட்பாதிக் கதியாவும் கலந்து சர்வாயுதர் காக்க!
காமர் பவுத்திரர் முன்னான விதியாரும்
சுற்றமெலாம் மயூரேசர் எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க!

வென்றி, சீவிதம் கபிலர் காக்க!
கரியாதியெலாம் விகடர் காக்க!
என்றிவ்வாறிது தனை முக்காலுமும் ஓதிடின்,
நும்பால் இடையூறென்றும் ஒன்றுறா, முனிவரர்காள்,
அறிமின்கள், யாரொருவர் ஓதினாலும் மன்ற ஆங்கவர்
தேகம் பிணியற வச்சிர தேகமாகி மன்னும்!



# ஔவையார் அருளி விநாயகர் அகவல்

(யாழ். வரதபண்டிதரின் சில பேதங்களுடன்)


சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ(கு) எறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழ்ஒளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந்(து) அருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்து நம்முதல்ஐந் தெழுத்தாயும் காட்டி
பொருந்திய எனது புன்மனம் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறம் இதுபொருள்என
வாடா வண்ணம் வந்தேனக்கருளி

கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
தெவிட்டாப் போதஞ் செப்பி என் செவியில்
உவட்டா ஞானத்துண்மையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடித்து
தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் அறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழிமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக்(கு) அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தரிசனப் படுத்தி
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டும் ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்தை அழுத்திஎன் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி.
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்
கணுவுற நின்று கருணையுங் காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் வாழ
அஞ்சக் கரத்தின் அருள் புரிவித்து
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக! விரை கழல் சரணத்
துரிமைசேர் அகவல் ஓதினார்
பொருளொடு தவமும் புகழும் பெறுவரே

# மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம்

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## காப்பு

தொல்லை இலும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்(து) ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்(று) அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!
வேகம் கெடுத்(து) ஆண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி!
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி!

நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்(கு) எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே! நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறொன்றறியேன்
புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராயப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திழைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யாவென் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா! விடைப்பாக வேதங்கள்
ஐயா, வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அளிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாயா விருளை
அறம்பாவ மென்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரு மேத்தப் பணிந்து.

*திருச்சிற்றம்பலம்.*

# ஆதி சங்கரர் அருளிய சிவ பஞ்சாட்சர தோத்திரம்



சிவபெருமானின் பஞ்சாட்சரமான "நமசிவாய" என்னும் மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்திலும் ஒரு சுலோகம் உள்ளது. ஐந்தெழுத்து மந்திரத்தை வேண்டிய அளவு செபம் செய்த பின்பு சிவ பஞ்சாட்சர தோத்திரத்தை பாராயணம் செய்தால் தான் முழுபலனும் கிட்டும்.

அரவினை அணியாய்க் கொண்டான் அரனெனும் மகேசுவரதன்தான்
விபூதியை தரித்த மேனி விளங்குவோன் நித்தன் சுத்தம்
அபேதமும் பேதம் ஆன அரிய திகம் பரனை யந்த
நகாரமாய் உருக்கொள் வோனை நலமுறத் துதிக்கின்றேனே.

கங்கையிற் கலந்த சாந்தம் களபமாய்ப் பூசுவார்காண்
நந்தியுள்ள ளிட்டோரான நற்கணநாதன் ஆனான்
மந்தாரை மலரின் பூஜை மல்கிடும் மகேச னான
மகாரமாய் உருக் கொள் வோனை மனங்கொளத் துதிக்கின்றேனே.

தக்கனின் யாகம் தன்னைத் தகர்த்து தாட்சாயணியின்
மிக்கதோர் வதன காந்தி அவித்தவன் நீல கண்டன்
தொக்கமா விடைக் கொடிகொள் தூயனை அரனை அந்தச்
சிகாரமாய் உருக் கொள் வோனைச் சிவனையாள் துதிக்கின்றேனே.

வசிட்ட கதத்திய ரோடு வல்லவர் கௌதமர் போல்
தவத்தினில் சிறந்தோர் தேவர் தாமுறை தொழு வாழ்த்தும்
சந்திர சூர்யாக் னியாமெனும் சார்முக் கண்ணன் தன்னை
வகாரமாய் உருக்கொள் வோனை வள்ளலைத் துதிக்கின்றேனே.

யட்ச சொரூபம் கொண்ட யாக செஞ் சடையைக் கொண்ட
கட்க பிணாக ஹஸ்தக் கடவுளை அழிவற்றோரை
தொக்க மங்களங்கள் யாவும் தொடர்திகம் பரராம் துய்ய
யகாரமாய் உருக்கொள் வோனை யாண்டுமே துதிக்கின்றேனே.



*திருச்சிற்றம்பலம்*

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும்புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ் சோதிக்கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெய்தி எழுந்தென்
னத்தா னந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்

புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டால் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ள
முண்ணெக்கு நின்றுகயா மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ளம் பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிநீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச்சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னிலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலு நாணமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்

தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
மேழி லியம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்

அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணொரு மண்ணுந் துதித்தாலு
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்தோங்காண் ஆரழல்போல்
செய்யவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்தாடும்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகளும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருத்தினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்களற் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கும் மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம்பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடி
ஆதி தறிம்பாடி அந்தம்ஆ மாபடிக்
பேசித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையான் விண்ணோரைத்தான்பணியாள்

பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாயந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் தருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரவிலா எங்கோமோ னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழிவாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம்பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தத்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாயந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணஜத்தொகைவீ றற்றாற்போற்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரைகைகள் தாமகலப்

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லாதோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழி லென் ஞாயிறெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

# ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் இயற்றிய சகலகலாவல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நிபதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான்பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே!

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே!

தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற் கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
நெடுந்தாட் கமலத்து
அஞ்சத்துவசம் உயர்த்தோன்
செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
ஏழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தம் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத் தமிழ்தீம்பால்
அமுதம் தெளிக்கம் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும்
கல்வி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்வாய்
நளினாசனஞ் சேர்
செல்விக்கரிதென் றொருகாலமும்
சிதையானம நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பாதம்புயத் தாயே
சகல கலாவல்லியே!!!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கணடளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்டகண்ட தெய்வம் முளதோ
சகல கலாவல்லியே!



# நவரத்தின மாலை

ஞான கணேசா சரணம் சரணம்
ஞான ஸ்கந்தா சரணம் சரணம்
ஞான சத்குரு சரணம் சரணம்
ஞானா னந்தா சரணம் சரணம்
ஞான புரீசா சரணம் சரணம்
ஞானா ம்பிகையே சரணம் சரணம்
ஞான சத்குரு சரணம் சரணம்
ஞானா னந்தா சரணம் சரணம்

## காப்பு

ஆக்கும் தொழில் ஐந்தரனாற்ற நலம்
பூக்கும் நகையாள் புவனேஸ்வரிபால்
சேர்க்கும் நவரத்தின மாலையினைக்
கார்க்கும் கணநாயக வாரணமே

## வைரம்

கற்றும் தெளியார் காடே கதியாய்க்
கண்மூடி நெடுங்கனவான தவம்
பெற்றும் தெரியார் நினையென்னில் அவம்
பெருகும் பிழையேன் பேசத் தகுமோ
பற்றும் வயிரப் படைவாள் வயிரப்
பகைவர்க் கெமனாக எடுத்தவளே
வற்றாத அருட் சுனையே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## நீலம்

மூலக் கனலே சரணம் சரணம்
முடியா முதலே சரணம் சரணம்
கோலக்கிளியே சரணம் சரணம்
குன்றாத ஒளிக்குவையே சரணம்
நீலத் திருமேனியிலே நினைவாய்
நினைவற்றெளியேன் நின்றேன் அருள்வாய்
வாலைக் குமரி வருவாய் வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## முத்து

முத்தே வரும் முத் தொழிலாற்றிடவே
முன் நின்றருளும் முதல்வீ சரணம்
வித்தே விளைவே சரணம் சரணம்
வேதாந்த நிவாசினியே சரணம்
தத்தேறிய நான் தனயன் தாய் நீ
சாகாதவரம் தரவே வருவாய்
மத்தேறுத்திக் கிணை வாழ் வடையேன்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## பவளம்

அந்தி மயங்கிய வானவி தானம்
அன்னை நடம் செயும் ஆனந்த மேடை
சிந்தை நிரம் பவளம் பொழிபாரொ
தேம்பொழி லாமிது செய்தவளாரோ
எந்த யிடத்தும் மனத்தும் இருப்பாள்

எண்ணுபவர்க்கருள் எண்ணமி குத்தாள்
மந்திர வேத மயப்பொருளானாள்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## மாணிக்கம்

காணக் கிடையாக் கதியா னவளே
கருதக் கிடையாக் கலையானவளே
பூணக் கிடையா பொலிவானவளே
புதுமைக் கிடையாப் புதுமைத்தவளே
நாணித் திருநாமமும் நின் துதியும்
நவிலாதவரை நாடாதவளே
மாணிக்க ஒளிக்கதிரே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## மரகதம்

மரகத வடிவே சரணம் சரணம்
மதுரித பதமே சரணம் சரணம்
சுரபதி பணியத் திகழ்வாய் சரணம்
சுதி ஜதி லயமே இசையே சரணம்
அரஹர சிவ என்றடியவர் குழும
அவரருள் பெற அருளமுதே சரணம்
வரநவ நிதியே சரணம் சரணம்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## கோமேதகம்

பூமே விய நான் புரியும் செயல்கள்
பொன்றாது பயன் குன்றா வரமும்
தீமேல் இடினும் ஜெயசக்தி எனத்
திடமாய் அடியேன் மொழியும் திறமும்
கோமேதகமே குளிர்வான் நிலவே
குழல் வாய் மொழியே தருவாய் தருவாய்
மாமேருவிலே வளர் கோகிலமே
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## பதுமராகம்

ரஞ்சனி நந்தினி அங்கணி பதும
ராகவி காஸவியாபினி அம்பா
சஞ்சல ரோக நிவாரிணி வாணி
சாம்பவி சந்த்ர கலாதரி ராணி
அஞ்சன மேனி அலங்க்ருத பூரணி
அம்ருத சொரூபிணி நித்ய கல்யாணி
மங்கள மேரு சிருங்க நிவாஸினி
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## வைடூரியம்

வலை யொத்தவினை கலையொத்தமனம்
மருளப் பறையா றொலியொத் தவிதால்
நிலையற்றெளியேன் முடியத் தகுமோ
நிகளம் துகளா கவரம் தருவாய்

அலைவற்றசை வற்றநுபூதி பெறும்
அடியார் முடிவாழ் வைடூரியமே
மலையத்துவசன் மகளே வருவாய்
மாதா ஜெய ஓம் லலிதாம்பிகையே

## பயன்

எவர் எத்தினமும் இசைவாய் லலிதா
நவரத்தினமாலை நவின்றிடுவார்
அவர் அற்புத சக்தி எலாம் அடைவார்
சிவ ரத்தினமாய்த் திகழ்வாரவரே

திருச்சிற்றம்பலம்



# விநாயகர் போற்றி

(கலாநிதி, அருட்கவி சி விநாசித்தம்பி புலவர்)

பாரோங்கும் யாழ்ப்பாணம் வண்ணையூரில்
பயில் கந்தர்மடத்துப் பழம் வீதிமேவும்
சீரோங்கும் சிவசக்தி விநாயகா – நின்
திருக்கோயில் அருள் செழிக்க
சைவநீதி தாரோங்கு நலம் சிறக்க கருணைசெய்து
தமியேங்கள் சித்தத்தில் அமர்ந்து காப்பாய்
நீரோங்கு சடையானும் உமையும் தந்த
நிருமலனே கணபதியே போற்றி போற்றி



# திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொடவல்பொரி கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபல கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரண்மகன் மற்பொரு திரள்புய
மதயானை
மத்தள வயிற்றனை உத்தமி புதல்வனை மட்டவிழ் மலர்கொடு
பணிவேளே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணி படும் அப்புனம் அதனிடை இயமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணமருள் பெருமாளே



# கற்பூரதீபம் காட்டும்போது இசைக்கக் கூடிய
# ஆரத்திப் பாடல்கள்

ஓம் ஜெய, ஜெய சக்தி
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய அனுதினம், பாடிப் பணிந்தோம்
ஜெகமெங்கும் அமைதியைத் தா – ஓம்....

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்கத்
தேவையெல்லாம் அடைய
அம்மம்மா தேவையெல்லாம் அடைய
பக்தி பெருகிடப் பாடியுருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை – ஓம்....

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரம் அருள்வாய்
அம்மம்மா ஈஸ்வரி வரம் அருள்வாய்
கரங்குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம்...

காசின் எங்கும் வேற்றுமை போக
கருத்தினுள் அன்பருள்வாய்
அம்மம்மா கருத்தினுள் அன்பருள்வாய்
தேசுடன் வாழவழி காட்டிடுவாய் ரஸ
தேவியுடன் ததிப்போம். – ஓம்....

நமஸ்காரம் கூறிக் கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து—ஞான நல்லொளி தீபம் வைத்து
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா – ஓம் ....

## கற்பூர கௌரம்

கற்பூர கௌரம் கருணாவதாரம்
சம்சாரசாரம் புஜகேந்த்ரஹாரம்
சதாவசந்தம் ஹ்ருதயாரவிந்தம்
பவம் பவானி சஹிதம் நமாமி

### பொருள்

கற்பூரத்தைப் போன்ற வெண்மையும் தூய்மையும் உடையவனே, கருணையின் அவதாரமே, இயற்கையின் சாரமானவனே பாம்பினை மாலையாய் அணிந்தவனே என் இருதயத்தாமரையில் குடி இருப்பவனே உன்னையும் பவானியான சக்தி தேவியையும் ஒரு சேர வணங்குகின்றேன்.



கல்லா பிழையும் கருதா பிழையும் கசிந்து உருகி நில்லா
பிழையும் நினையா பிழையும் நின் ஐந்தெழுத்தை சொல்லா
பிழையும் துதியா பிழையும் தொழா பிழையும் எல்லாப்பிழையும்
பொறுத்து அருள்வாய் இறைவா கச்சி ஏகம்பனே.

(பட்டினத்தார்)

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்



# திரிகோணமலை விஷ்ணு கோவிலில் பார்த்த நல்லதொரு விடயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## இந்து ஆலயத்திற்குள் உட்செல்லும் எந்தவொரு ஆண்மகனும் மேலங்கி அணியக்கூடாது ஏனெனில்...

இந்து ஆலயங்களுக்குள் உதயத்தில் இருந்து சாயராட்சை வரை ஓதப்படும் ஆயிரமாயிரம் மந்திரங்களின் அதிர்வுகளும், அவைகள் கருங்கல் விக்கிரகங்களில் பட்டு தெறிப்பதனால் ஏற்படும் நுண் அதிர்வுகளும் மகாமணி, பஞ்சமணி, சிறியமணி, மேளம், தாளம், நாதஸ்வரம், ஒத்து ஆகியவற்றினால் ஏற்படும் அதிர்வுகளும் எமது 6 ஆதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிஸ்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுதி, ஆஞ்ஞா சக்கரங்களும் துரிதமாக செயற்படுத்துகின்றன. குறிப்பாக ஆண்களின் விடயத் தில் இவ்வதிர் வலைகள் பெருமளவில் உதவுகின்றது. ஆணின் ஜனனிப் பகுதியில் விதைப்பையில் உருவாகும் விந்துக் கலன்கள் புதிய உயிரொன்றை தோற்றுவிக்கும் வல்லமை படைத்த விசேட கருவொன்றை (Nucle some) தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்விந்துக்களைச் சூழ சேட் டோலி கலங்கள் அமைந்துள்ளன. இக்கலங்கள் உடல் வெப்ப நிலையிலும் பார்க்க குறைந்த வெப்பநிலையில், விந்துக் களைப் பாதுகாக்கின்றது.

இவ்வாறான புதிய உயிர் ஒன்றினை தோற்றுவிக்கும் வல்லமையுள்ள விந்துக்கலம் துரிதமாக செயற்பட வேணுமாக இருந்தால் 6 சக்கரங்களுக்குள் குறிப்பாக மூலாதாரச் சக்கரம் உசார் நிலையில் இருக்க வேண்டும். இதற்கு அமைய ஆலயத்தினுள் காணப்படும் நுண் அதிர்வுகள் உட்பட மற்றும் சகல அதிர்வு களையும் உடல் பூரணமாக கிரகித்துக் கொள்ளுகின்றது. இவ்வாறு கிரகிப்பதற்கு ஆண்கள் மேலங்கி அணிந்திருப்பது தடையாக இருக்கும்.

துரிதமாக முன்னேறிவரும் விஞ்ஞான வளர்ச்சியினால் மனித உடலில் உள்ள பல சிக்கலான நோய்களை அதிர்வுகளினால் (Vibration)

உடைக்கப்படுகின்றது. குறிப்பாக சிறுநீரகம், சிறு நீர்ப்பை, பித்தப்பை, இருதய நாடிகளுடன் சம்பந்தப்பட்ட அடைப்புகளுக்கும் உடலில் ஏற்படும் பல வகையான நோக் களுக்கும் (செவ்வூதாகதிர்கள்) குணப்படுத்து வதற்கு அதிர்வுகள் பயன்படுத் தப்படுகின்றன. இந்த வகை செயற்கை அதிர்வுகளிலும் பார்க்க மந்திரங்களினால் ஏற்படும் அதிர்வுகள் அதிகம் சக்தி வாய்ந்த வைகளாகும். உதாரணமாக.....

பல வருடங்களுக்கு முன் மத்திய இந்தியாவில் உள்ளபோப்பால் என்ற மானிலத்தில் உள்ள இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட நச்சு வாயுக் கசிவினால் ஒரேயொரு குடும்பத்தை தவிர பல்லாயிரக் கணக் கான குடும்பங்கள் உயிரிழந் தார்கள், இக்குடும்பம் தலைமுறை தலைமுறையாக "ம்ருத்யுங்ஜ ஹோமம்" செய்து வந்தார்கள். ஒரு குறிப்பிட்ட சூழலில் இருக்கும் பலதரப்பட்ட குறைபாடுகளை "அக்னி கோத்ர ஹோமம்" செய்வதன் மூலம் தூய்மைப்படுத்த முடியும். இந்த ஹோமத் தை தொடர்ந்து செய்வதனால் செய்பவரை சுற்றி இருக்கும் 1 கிலோ மீற்றர் உயரமும் 12 கிலோமீற்றர் கிடையும் உள்ள சூழல் பூரணமாக சுத்தப்படுத்தப்படுகின்றது. இச்சூழலுக்குள் இருக்கும் இயற்கை வளங்களும் அதற்குள் இருக்கும் ஜீவராசிகளும், மனிதர்கள் உட்பட சுமூகமான நிலை ஒன்றை அடைவார்கள். இது சம்மந்தமான பூரண விளக்கத்தை அறிந்து கொள்வதற்கு இவ்விலக்கத்தை தொடர்பு கொள்ளவும்: 0774309270

இந்துக் கோவிலின் விக்கிரங்கள் பிரதிஸ்டை செய்து, கும்பா பிஷேகம் போன்ற பலதரப்பட்ட சடங்குகள் முடிந்து 12 வருடங்களுக்கு தொடர்ந்து காலை 4:30 மணியில் இருந்து இரவு 7:30 மணிவரை 6 கால பூசைகளும் கிரமமாக விஷேட அபிஷேகங்களும், திருவிழாக்களும செய்யப்படுகின்றன. இவை யாவும் மந்திரங் களுக்குள்ளேயே அடக்கம். மந்திரங்களினால் ஏற்படும் அதிர்வு வலயத்திற்குள் வரும் எவராயிருப் பினும், அவர்களுக்குள் தூண்டல் அதிர்வுகள் உண்டாகும். இந்த அதிர் வுகள் குறிப்பாக புதிய உயிர் ஒன்றை தோற்றுவிக்கும் ஆணின் விசேட கருவை துரிதமாக செயற்படுவதற்கு உதவுகிறது. ஆகவே ஆண்கள் இந்து ஆலயத் திற்குள் செல்லும் போது மேலங்கிகள் எதுவும் இன்றி செல்வதே சிறந்ததாகும்.

# “நீள நினைந்தடியேன் ”

## யாழ். கந்தர்மடம் பழம் வீதி ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் சரிதம்

### விநாயகர் காப்பு



திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்



உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நூதலி னோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள் கிம்புரி வயங்க
மெய்ச்செவிக் கவரி தூங்க வேழமா முகங்கொண் டுற்ற
கச்சியின் விகட சக்கர கணபதிக் கன்பு செய்வாம்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை கிழக்கில் கந்தர்மடம் பழம் ரோட்டில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சித்திவிநாயகரின் சரிதம் பற்றி எழுத்து பூர்வமான ஆவணங்கள் கிடையாவிடினும், இவ்வாலயத்தின் ஸ்தாபகரான எனது அன்புத் தந்தையார், இறையடி எய்திய ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் (தோற்றம்: 26-06-1898 - இறையடி: 16-05-1972) அவர்களின் வாயிலாக அடியேனுக்குக் கிடைத்த தகவல்களைப் பின்வருமாறு தருகிறேன். மேலும் அப்பாவின் நினைவுமலரில் கிடைத்த சில தகவல்களும் எமக்கு உதவியாயின. இற்றைக்கு ஏறத்தாழ 200 வருடங்களுக்கு முன்னர் இக்கோவில் ஸ்தாபிக்கப்பட்டது என அறியக்கிடக்கிறது.

எனது பூட்டனார் வசித்த வீட்டிற்கு அருகாமையில் திரு இராமசாமி குடும்பத்தினர் - பிற்பகுதியில் திரு முத்தையா குடும்பத்தினர் வசித்தனர். தற்போது கோவிலமைந்துள்ள காணியில் அன்று ஒரு திருவாத்தி மரம் பெரிதாக வளர்ந்திருந்தது. அந்த மரத்தை - வீடுகட்டும் நோக்குடன் - அகற்ற முயன்றபோது அம்மரத்தின் வேரிடையே சிக்குண்ட

பிள்ளையார் வடிவிலான கல்லொன்று காணப்பட்டது. அன்றிரவு, எனது அப்பாவின் பாட்டனாரின் கனவிற் தோன்றிய விநாயகர், தம்மை அக்காணியில் கோவில் அமைக்குமாறு பணித்தாராம்.

இவ்வதிசயத்தை அவர் அயலாருக்கும் ஊர் மக்களுக்கும் தெரிவித்து வியப்பிலாழ்த்தினார். ஏரம்பர் எனும் பக்தர் இவ்விக்கிரகத்தை அவ்விடத்திலேயே வைத்துப் பூஜிக்கலாயினார். பின்னர் அயலிலுள்ள அடியார்களின் ஆதரவுடன் அந்நிலத்திலேயே குடிசை போன்று கோவிலமைத்து, அப்பாவின் பாட்டனாரின் - எனது பூட்டனாரின்- (வேங்க டேஸ்வரக்குருக்கள்) பொறுப்பில் நிவேதனங்களுடன் கூடிய பூசைகள் ஒழுங்காக நடைபெற்றன.

பூட்டனாரின் மறைவுக்குப் பின்னர் எனது பாட்டனார் (சுப்பிர மணியக் குருக்கள்) கோவிற் பொறுப்பினை ஏற்றுகொண்டார். தொடர்ந்து அப்பா (பரமேஸ்வரக் குருக்கள்) கோவிற் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தார்.அன்று மண்ணால் பூசப்பட்ட சுவரும், நிலமும் ஓலைக் கூரையுமே கோவிலின் காப்பாக இருந்தது. பின்னர் அப்பாவின் பெருமுயற்சியால் அடியார்களில் உதவியுடன் திருப்பணிவேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதன் பின்னர் நடந்தமுக்கிய முன்னேற்றங்கள் அடியேனின் நினைவில் நன்கு பதிந்துள்ளன.



ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள்



ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள்

அச்சமயம், அதாவது அப்பாவின் காலத்தில், (அண்மித்திருந்த) வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் காணியில் கதிர்காமர் - அன்னப் பிள்ளை தம்பதியர் (மண்ணாலான) கோவிலின் பரிகாரப் பராமரிப்புப் களைப் பேணிவந்தனர். கதிர்காமர் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகள் பொன்னம்மாவை, பிரசித்த வேலைத் திணைக்கள (P.W.D) அதிகாரி யான திரு சிவகுருநாதரர் மணம் புரிந்து வாழ்ந்துவந்தார். இந்தக் காலகட் டத்தில் திரு சிவகுருநாதரின் மூத்த தாரத்தின் மகளை மணந்த சட்டத் தரணி எஸ்.ஸீ.கதிரவேலுவின் பணியாக, சுண்ணாம்புச் சுவரும் கூரையும் கட்டி முன் கூரையும் அமைக்கப்பட்டது.

திரு சிவகுருநாதரின் கனிஷ்ட புத்திரனே தற்போதைய கோவிலில் திருமுறைகள் பாடியும் பல்வேறு சேவைகளில் ஈடுபட்டுத் தொண்டாற்றும் எனது இளம்பராய வகுப்புத் தோழர் - இளைப்பாறிய தபாலதிபர் - திரு சிவசுப்பிரமணியம் (மணி) ஆவார்.

குடிசைபோன்ற கோவிலில் எழுந்தருளிய விநாயகப் பெருமா னுக்கு வீதியில்லாததால் பக்கத்து வீட்டுக்காரரின் இணக்கத்துடன் கோவிலின் வலது பக்கமும் பின் வீதிவழியாக இடதுபக்கமும் காணித் துண்டு எடுத்து வீதி அமைக்கப்பட்டது. கைம்மாறாக அடுத்த வீட்டாருக்கு அப்பா தமது காணியின் சமமான பகுதியையும் விட்டுக்கொடுத்து வீட்டிலிருந்து (நைமித்தியம் போன்றவற்றை எடுத்துச்செல்லும் முகமாக) கோவிலுக்குச் செல்லும்படியாக பாதை உரிமையையும் பெற்றெடுத்தார். (எனினும், பின்னர் ஏற்பட்ட பல வருட காலம் தொடர்ந்த பிரச்சினைகள் நிமித்தம் அண்ணா தாம் கோவிலின் பொறுப்பேற்ற பின்னர் இப்பாதையை விட்டுக்கொடுத்தார்).

தொடர்ந்து 1952ல் பிரபல வர்த்தகர் க.கா.செல்லையாவின் முன் னெடுப்பால் ஊர்மக்களின் உதவியுடன் (நிதி மற்றும் பொருளுதவி - உ-ம்: வெண்கலப் பாத்திரங்கள்) காண்டாமணி (இன்றும் ஒலிபெருக்கிக் கொண்டிருக்கிறது) ஸ்தலத்திலேயே வார்க்கப்பட்டு, கும்பாபிஷேகமும் நடைபெற்றது. எனது சிறுபிராயத்தில் இம் முக்கிய காண்டாமணியின் வார்ப்பு வேலைகளைப் பார்த்து பெரிதும் அதிசயித்ததுண்டு.

1952ல் எனது தகப்பனாரின் முயற்சியால் கந்தர்மடவாசிகளான திருவாளர்கள் சாக்கர் நாகலிங்கம், உமாபதி, கூழாவடி தியாகராசா, டிக்கோயா சின்னத்தம்பி ஆகியோருடன் ஒருவாகனத்தை வாடகைக்கு அமர்த்தி கொழும்பு, கண்டி, கம்பளை, பண்டாரவளை, நுவரெலியா போன்ற இடங்களுக்குச் சென்று கோவில் நிர்மாண வேலைகளுக்கான நிதியுதவி தேடிக்கொண்டனர். இத்துடன், கந்தர்மடவாசிகள் மற்றும் விநாயகப் பெருமானின் பக்தர்களின் உதவியுடன் கோவில் பெரு நிர்மாணம் பூர்த்தி யாயிற்று.

இந்தக்காலகட்டத்திற்தான் பிள்ளையாருக்கருகாமையில் மனோன்மணி அம்பாளும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

மற்றும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் வீதிவலம் வருதற்குப் பேருதவியாக வாகனங்கள், குடை, விநாயகரின் பூஜைகளுக்குத் தேவையான மணி, தீபங்கள், ஷோடசோபாரங்கள் பக்தர்களின் உதவியால் சேகரிக்கப்பட்டன. முக்கியமாக விநாயகப்பெருமானுக்கு வெள்ளியாலான அங்கியை, பழம் வீதி வாசியான திரு அழகு அவர்கள் உவந்தளித்தார்கள். ஊர்வாசிகளின் கைங்கரியத்தால் விநாயகப் பெருமானின் வீதிவலத்துக்கு உபயோகமான சகடை ஒன்றும் செய்விக்கப்பட்டது.

1954ல் பன்னிரண்டு நாள் அலங்காரத் திருவிழா கொண்டாடப்பட்டது. தொடர்ந்து, கம்பளையில் பிரபல வர்த்தகம் செய்து வந்த கந்தர்மடம் செம்பாட்டு ஒழுங்கையில் (தற்போது குமாரசாமி வீதி) வசித்த மாணிக்கம் என்பாரின் பேருதவியால் 1958ல் புதிய இரதமும் செதுக்கப்பட்டு வருடாவருடம் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமான் வீதிவலம் வரலாயினார்.

ஆரம்பத்தில் முதற் திருவிழாவும் இரதமும் கடைசித் திருவிழாவுமே தெருவீதிவலம் வரும் நாட்களாயிருந்தன. பின்னர், அப்பாவின் தொடர்ந்த பெருமுயற்சிகளாலும் கந்தர்மட ஸ்ரீ சித்திவிநாயகர் அடியார்களினது பேராதரவுடனும் எல்லாத் திருவிழாவுமே தெரு வீதிவலத்துடன் கூடிய பெருவிழாக்களாக மலர்ந்தன.

திருவிழாக்காலங்களில் மேளவாத்தியக் கச்சேரிகளுக்காக உள்ளூர் பிரபல வித்துவான்களான அளவெட்டி பத்மநாதன், பீ.எஸ்.ஆறுமுகம் பிள்ளை, நாச்சிமார்கோவிலடி சந்தானம் குழுவினர், தவில் வித்துவான் பழனி குழுவினர், இணுவில் கோவிந்தசாமி, தவில் சக்கரவர்த்தி தெட்ஷணாமூர்த்தி உட்பட பலரும் இந்தியாவிலிருந்தும் முத்துவீருப்பிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம், கோடையிடி, குழுக்கா கணபதி போன்ற பிரபல வித்துவான்களும் அவ்வப்போது விழாக்களுக்குச் சிறப்புக் கொடுத்தனர். வெவ்வேறு வகையான இசைவிருந்துகளும் (வாய்ப் பாட்டு, முகவீணை, வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கங்கள், வட்டுக் கோட்டை தியாகராசாவின் உன்னத முகர்சிங் மற்றும் வினோத வாய் வாத்தியங்கள் இத்தியாதி) இடம்பெற்றன.

இவற்றோடு பெருமானின் வீதியுலாவின்போது கரகம், சீனடி சிலம்படி போன்றவையுடன் மாபெரும் வாணவேடிக்கைகள்கூட இடம் பெற்றிருந்தன.

இவற்றுள், மிகப்பிரசித்தமான தொடர் கதாப்பிரசங்கம் என்றும் எனது நினைவிலுள்ளது. வட்டுக்கோட்டை C.S.S மணி ஐயர் (பின்னர் மணி பாகவதராயும் அதன்பின்னர் நல்லூர் ஆதீன ஸ்தாபகரான சுவாமி நாதத் தம்பிரானாகவும் திகழ்ந்தவர்) அவர்களது சுவையான தொடர் கதாப்பிரசங்கங்களும், பலவருடங்களாக ஸ்ரீ சித்திவிநாயகப் பெரு மானின் முன்றலில் நடாத்தியதன் பொருட்டு பிரபலமானதும், அன்னாரை நல்லூர் திருவிழாக்களின்போதும் கதாப்பிரசங்கம் செய்ய ஒழுங்கானது. எனது பேரன்புக்கும் மதிப்புக்குமுரிய மணி ஐயரின் கதாப்பிரசங் கத்திலேயே 1958ல் அடியேனது மிருதங்க அரங்கேற்றம் (மிருதங்க விற்பன்னர் M.N.செல்லத்துரை முன்னின்று) நடைபெற்றது என்பதை நினைவுகூருகிறேன். பின்னொரு சமயத்தில் (1964) (ஸ்ரீ சித்திவிநாயகரின் மணிமண்டபத் திறப்பு விழாவின் போது) சுவாமிநாதத் தம்பிரானின் பிரசங்கத்துக்கும் மிருதங்கம் வாசிக்கும் பேறினைப் பெற்றேன்.



**கந்தப்பசெட்டியார் மண்டப திறப்பு விழா (1964)**

தொடர்ந்த முன்னேற்றப்பாதையில், அப்பாவின் இடையறா முயற்சியால் கோவிலுக்கு எதிரேயுள்ள கோவிலுக்காக அன்பளிக்கப்பட்ட காணியில் (1964) அடியார்களின் பேராதரவுடன், ஒரு மணிமண்டபமும் கட்டியெழுப்பப்பட்டு, வண்ணார்பண்ணை சிவன் கோவில் முகாமை யாளர் முன்னிலையில் சிறாப்பர் கனகசபை அவர்களாலும் யாழ்ப் பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் உரிமையாளர் திரு கந்தப்பசெட்டியாராலும் திறந்து வைக்கப்பட்டது. இதன் நிமித்தம் விநாயகப் பெருமானின் (பூங்காவனத்திருவிழா, மேளக் கச்சேரி, கதாப்பிர சங்கம், அன்னதானம் போன்ற) விசேஷங்களுக்கு இம் மணிமண் டபம் பேருதவியானது. அத்தோடு, அடியார்களின் திருமணங்கள் போன்றவற்றையும் நடாத்துவதற்கு இம்மண்டபம் இன்றியமையாததாக உள்ளது. அப்பாவின் காலத்தின் பின்னர் பல்லாண்டுகாலமாக எல்லாத் திருத்தொண்டுகளிலும் உறுதுணை யாயிருந்த எனது மூத்த தமையனார் ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் கோவிலின் அனைத்துப் பொறுப் புக்களையும் ஏற்று நடத்துவாராயினார். பிரசித்திபெற்ற வண்ணை வியாகரண சிரோன்மணி ஸ்ரீ சீதாராம

சாஸ்திரிகளிடம் முறையே சமஸ் கிருதக் கல்விகற்று பாண்டித்தியம் பெற்ற பின்னர் 1961ல் அண்ணாவுக்கு குருப் பட்டமும் அளிக்கப்பட்டது.

1983இல் இனக்கலவர அனர்த்தங்களினால் கோவிற் தேரில் பெரும் பகுதி தீக்கிரையானது. பின்னர் எனது சகோதரர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்களின் முயற்சியால் சித்திவிநாயகரின் பக்தர் களின் பொருளுதவியுடன் திருநெல்வேலி சிற்பாசிரியர் சீவரத்தினம் குழுவினரால் புதிய தேர் உருவாக்கப்பட்டது. தற்சமயம் விநாயகப் பெருமானின் விழாக்களில் உபயோகத்திலுள்ளது இத் தேரேயாகும்..

1986ல் அண்ணாவின் தொடர்ந்த முயற்சியினால் சித்திரத்தேர் புதிதாகச் செதுக்கப்பட்டு வருடந்தோறும் விநாயகப்பெருமான் வீதிவலம் வரலாயினார்.

இதன்பிரகாரம் வெளியிடப்பட்ட நூல் "ஞானக்கொழுந்து" இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. 1983 (தொடர்ந்த ஆண்டு களிலும்) அரசியல் கொந்தளிப்பு நிலைமையால் கோவில் அமைப்பு பெரிதும் பாதிக்கப்பட்டது.

(1983 -1992) சமூக அமைதி குலைந்த நாட்களிலும் சரமாரியான குண்டுவீச்சுக்களுக்கு மத்தியில் அண்ணாவின் திடமான மனத்துணி வினால் கோவிலில் நித்திய பூஜைகளும் முக்கிய விரத பூஜைகளும் விழாக்களும் தொடர்ந்து நடைபெற்றன. 1992ல் வதிவிடங்களை விட்டகல மேலிடத்து ஆணைகளைத் தொடர்ந்து அண்ணா குடும்பம் - அம்மா அனைவரும் இடம்பெயரவும் நேரிட்டது. இருந்தும், இயன்றவரை ஸ்ரீ சித்திவிநாயகப்பெருமானின் நித்திய பூசைகளும் திருத்த வேலைகளும் நடைபெற அண்ணா ஒழுங்கு செய்திருந்தார்.

அண்ணாவின் உடல் நிலை சீரற்ற தன்மையாலும், போக்கு வரத்துப் பிரச்சினைகளாலும் ஸ்ரீ சித்திவிநாயகப் பெருமானின் கோவிற் தொண்டினைத் தொடர்ந்து சீராகத் தொடரமுடியவில்லை. மற்றும் நாட்டு நிலைமையின் நிமித்தம் குடும்பத்தினரின் பங்களிப்பை முழுமையாக அளிக்கமுடியாது போய்விட்டது.

அண்ணாவினதும் குடும்பத்தினரினதும் வாயிலாக அவ்வப்போ கிடைக்கப்பெற்ற விபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

இவ்விடயத்தில், பெருமுயற்சி எடுத்த தலைவராக திரு நடராசா ஸ்ரீ விஜயா (ஸ்ரீநி) பொறுப்பேற்று விநாயகப் பெருமானின் (2001 ல்) திருப்பணி வேலைகள், விழாக்கள் இத்தியாதி அனைத்தும் (ஸ்ரீ சித்தி விநாயகரின் உள்நாடு, வெளிநாட்டு பக்தர்கள் பேருதவியுடன்) திறம்பட நடத்திவருகிறார். அவருக்குப் பக்கத்துணையாக (திரு.கு.கங்கை வேணியன் தலைவராகவும் பேராசிரியர் சா.சத்தியசீலன் செயலாளராகவும் திரு சா கணேசராசா பொருளாளராகவும் கொண்ட) திருப்பணிச்சபை உருவாக் கப்பட்டது.

மேலும் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா இரா. வாமதேவன் அவர்களின் பேருதவியால், அன்னாரின் பல்வேறு உதவிக ளோடு, பஞ்சலோகத்தில் பஞ்சமுக விநாயகர் விக்கிரகமும் உவந்தளிக் கப்பட்டது.

கோவிலின் நிலைமையைப் புரிந்துகொண்ட பக்தர்கள் புரிந்துணர்வுடன் குழுவொன்றமைத்து (பக்தப் பெருமக்களினதும், அரசாங்கத்தினதும் நிதி உதவியால்) புனருத்தாரண வேலைகள் நடை பெற்று 2003ல் கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் இத்தியாதி நிறைவு பெற்றன.

தொடர்ந்து, 2009 ல் அண்ணா, எமது உறவினரான பிரஹ்ம ஸ்ரீ சிவசாமி ஐயர் விஜயேந்திரசர்மாவுக்கு கோவிற் பணிகளைத் திருப்தி கரமாக நடாத்தும் நோக்குடன் அப்பொறுப்புகளைக் கையளித்து எமது பூர்வீக இல்லத்தையும் விற்பனை செய்ததுடன், உறுதுணையாக, பரி பாலனம் தொடர்ந்து செய்தற்கு அடியார்கள் தன்னார்வக் (நிர்வாகக்) குழு ஒன்றையும் அமைத்துக் கொடுத்தார்.

பிரம்ம ஸ்ரீ விஜயேந்திரசர்மாவின் தாய்வழித் தாத்தா எனது தகப்பனாரின் சகோதரியை மணம் முடித்தவர். எனவே ஆரம்பகாலத்தில் இக்கோவிலின் பராமரிப்பில் அவரது தாத்தாவும் ஓரளவு ஈடுபட்டவர் என்பது நம்பத்தக்கது.

அன்றாட பூஜை போன்றவற்றை பிரஹ்ம ஸ்ரீ விஜயேந்திர சர்மாவே பொறுப்பாக நடத்திவருகிறார். வருமானத்தில் (ஒப்பந்தத்தின் படி) உரிய பங்கினையும் கோவில் நிர்வாகத்துக்காக நிர்வாகக்குழுப் பொறுப்பாளரிடம் செலுத்துகிறார். புரிந்துணர்வின் படி நிர்வாகக் குழுவினர் கோவில் பராமரிப்பு வேலைகளையும் விசேஷ விழாக்களையும் பொறுப்புடன் ஏற்றுத் தொண்டாற்றி வருகின்றனர்.

அண்ணா ஸ்ரீ சோமஸ்கந்தக் குருக்களின் மறைவைத் (தோற்றம் 01-09.1935 மறைவு 04.11.2011) தொடர்ந்து அன்னாரது மூத்த மகள் (அண்ணாவின் ஏகபுத்திரி) கோவில், அதன் கூடவுள்ள மணிமண்டபம் ஆகியவற்றிற்குக் காப்பாளராகக் கடமையாற்றுகிறார்.

2015ல் (பன்னிரண்டு வருடங்களின் பின்னர்) அண்ணாவின் மகள் திருமதி உஷாவின்மேற்பார்வையில், கும்பாபிஷேகம் - மண்டலாபி ஷேகம் ஆகியன சிறப்பாக நடைபெற்று நிறைவெய்தியது.

தற்போது (ஆனி 2018) கோவில் பரிபாலனக் குழு அவ்வப்போது தேவையானபடி நேர்த்தியாகக் காப்பாளர் / போஷர்களுடன் இணைந்து அர்ச்சகரின் பேராதரவுடன் விநாயகரின் பணிகளைச் சிறப்புற நடாத்தி வருகிறது.

**யாழ் கந்தர்மடம் - பழம் வீதி**

**ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் விபரங்களை அறியப் பின்வரும் இணையத்தளத்தின் மூலம் அறியலாம்**

**www.palamroadpillaiyar.org**

## ஸ்ரீ சித்திவிநாயகர் போற்றி
## முன்னாள் நினைவுகள்



பூங்காவனம் - 1954



ஸ்ரீ மணி ஐயர் (சுவாமிநாதத் தம்பிரான்) பிரசங்கம் -
மிருதங்க அரங்கேற்றத்தில் - 1959



தேர் திருவிழா - 1954



2003 கும்பாபிஷேக குழு

# கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்

## பரிபாலன குழு

| | | |
|---|---|---|
| போஷகர் ( சர்வதேச தொடர்புகள்) | : | ப.அம்பிகாபதி |
| காப்பாளர் | : | உஷா.செஷாமணி |
| தலைவர் | : | K.கங்கைவேணியன் |
| உபதலைவர் | : | N. ஸ்ரீ விஜயா |
| காரியதரிசி | : | N.பிரபாகரன் (கண்ணன்) |
| பொருளாளர் | : | T.கணேசராசா |
| தொடர்புகள் | : | யோகேஷ் ஸ்ரீ விஜயா |
| கோவில் அன்றாடத் தேவைகள் | : | S .கந்தசாமி |



**ஆஸ்தான அர்ச்சகர் சி.விஜயேந்திர சர்மா**

பரிபாலகர் ஸ்தாபகர்
ஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் குடும்பத்தினர் சார்பில்
இந்நூலைத் தொகுத்தளித்தவர்
வைத்திய கலாநிதி பரமேஸ்வரக் குருக்கள் அம்பிகாபதி (லண்டன்)



# வாழி

சீரோங்கு சிவப்பொருளின் திருமுதல்வன் வாழி!
சிவநெறியும் பைந்தமிழும் தவநெறியும் வாழி!
காரோங்கிக் கழனிகளும் ஆவினமும் வாழி!
கனிச்சுவையாம் கவிதையுடன் பலகலையும் வாழி!
நேரோங்கு நெறிபலவும் நிறைந்து நிதம் வாழி!
நேயமுடன் பூசைபுரி அந்தணரும் வாழி!
பாரோங்கும்படியாகப் பழவினைகள் போக்கும்
பழந்தெருவாழ் கணபதிதாள் வாழி வாழி!



**யாழ். கந்தர்மடம் - பழம் வீதி**
**ஸ்ரீ சித்திவிநாயகர்**

## திருப்புகழ்

ஆனைமுகத்தொடு அமர்வோனே
அருளொடு ஆயுளுந் தருவோனே
நானது நீயென நவில்வோனே
நமதுளே நர்த்தன மிடுவோனே
கானத்தி லுடனுறை கவியோனே
காத்திடு மைங்கர முடையோனே
வானவர் தொழுதிடு மறையோனே
வளமிகு பழந்தெருப் பெருமானே

Guru Printers